செ.வெ.எண் : 316

செய்தி வெளியீடு

நாள் : 01.06.2011

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மக்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் விரைவாகவும், செம்மையாகவும் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நோக்கத்தில், பதவியேற்ற அன்றே ஏழு முக்கிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து அதற்குரிய கோப்புகளில் கையெழுத்திட்டார்கள். பொது விநியோக திட்டத்தின் கீழ் அரிசி பெறத் தகுதியுடைய குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் 20 கிலோ அரிசி இலவசமாக வழங்கவும், அந்தியோதயா அன்னயோஜனா குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் 35 கிலோ அரிசியை இலவசமாக வழங்கிடவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 16.5.2011 அன்று ஆணை பிறப்பித்தார்கள்.

ஏழை, எளிய, நலிந்த மற்றும் நடுத்தர மக்கள் உணவின்றி எக்காலத்திலும் வாடக் கூடாது என்ற கொள்கையிலும், தமிழக மக்களுக்கு என்றும் உணவு பாதுகாப்பு கிடைக்கப் பெற வேண்டும் என்ற குறிக்கோளிலும் உறுதியாக உள்ள மாண்புமிகு தமிழக முதலலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தேர்தல் அறிக்கையில் தெரிவித்திருந்தபடி, குடும்ப அட்டைதாரர்கள் பயன் பெறும் வகையில் இலவச அரிசி வழங்கும் திட்டத்தை, இன்று (1.6.2011) சென்னை, ஆழ்வார்பேட்டை, ஸ்ரீராம் காலனி டி.யு.சி.எஸ். நியாய விலைக் கடையில் பயனாளிகளுக்கு அரிசி வழங்கி தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையின்படி, அரிசி பெறத் தகுதி வாய்ந்த ஏழை, எளிய, நடுத்தர குடும்பங்கள் அனைத்தும் பயனடையும் வகையில், அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, இத்திட்டத்தின் கீழ் 20 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது. இதன்படி, தமிழ்நாட்டிலுள்ள 32 ஆயிரத்து 571 நியாயவிலைக் கடைகளில் அரிசி பெற்று வரும் **ஒரு கோடியே 65 இலட்சத்து 91 ஆயிரத்து 482 குடும்ப அட்டைதாரர்களும்,** ஒவ்வொரு மாதமும் அவர்களுக்குரிய அரிசி முழுவதையும் இத்திட்டத்தின் மூலம் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, குடும்ப அட்டைதாரர்களின் விருப்பத்திற்கேற்ப அவர்களுக்குரிய அரிசியை, பச்சரிசியாகவோ அல்லது புழுங்கல் அரிசியாகவோ வழங்கப்படும். மேலும், **18 இலட்சத்து 62 ஆயிரத்து 268 அந்தியோஜனா குடும்ப அட்டைதாரர்களுக்கு** வழங்கப்பட்டு வரும் 35 கிலோ அரிசியும், இன்று முதல் (1.6.2011) இலவசமாகவே வழங்கப்படும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்துள்ள இத்திட்டத்தால், தமிழ்நாட்டில் உள்ள அரிசி பெற தகுதி வாய்ந்த **ஒரு கோடியே 84 இலட்சத்து 53 ஆயிரத்து 750 குடும்ப அட்டைதாரர்கள்** பயனடைவார்கள்.

இவ்விழாவில் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செல்லூர் கே.ராஜு அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர், அரசின் உயர் அதிகாரிகள், திரளான பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை 9

நாள்: 1.6.2011